*18*

# அற்புதங்களின் இரண்டாம் தொகுப்பு

## (8:23-9:8)

*மத்தேயு 8:23-9:8 வசனப்பகுதி, இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட மேலும் மூன்று அற்புதங்களை வெளிப்படுத்துகிறது. இவைகளில், புயலை அமர்த்துதல் (8:23-27), அசுத்த ஆவி பிடித்திருந்த இரு மனிதர்களைக் குணமாக்குதல் (8:28-34) மற்றும் திமிர்வாதக்காரர் ஒருவரைக் குணமாக்குதல் (9:1-8) ஆகியவை உள்ளடங்குகின்றன. இந்த எடுத்துரைப்புகள், இயற்கையின்மீதும், பொல்லா ஆவிக்குரிய சக்திகள் மீதும் உடல்ரீதியான வியாதிகள் மீதும் இயேசுவின் வல்லமையை விவரிக்கின்றன. இவைகள் விசுவாசம் மற்றும் சந்தேகம், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் புறக்கணித்தல் ஆகியவை கலந்தவையாக உள்ளன.*

### *புயலை அமர்த்துதல் (8:23-27)*

***23அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின்சென்று ஏறினார்கள்.***

***24அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்.***

***25அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்' என்றார்கள்.***

***26அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.***

***27அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இருவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.***

*காட்சியானது ஒப்புக்கொடுத்தல் அற்ற பின்பற்றாளர்களில் இருந்து (8:18-22) விசுவாசக் குறைவை செயல்விளக்கப்படுத்திய சீஷர்களிடம் (8:23-27) திரும்புகிறது. இயேசுவை அடிக்கடி வலிவார்ந்த பின்பற்றாளர்கள் அணுகினர் மற்றும் அங்கிருந்தவர்கள் அவருக்குச் சலிப்பு உண்டாக்கினர்.*

***வசனம் 23.*** *கடலின் அக்கறைக்குப் பயணமாவதற்கு கடைசியில் இயேசு* ***படவில்*** *பிரவேசித்த போது பின்மாலைப் பொழுது அண்மித்துக் கொண்டிருந்தது. பன்னிருவரில் சிலர் அவருடன் படவில் இருந்தனர். மற்ற* ***சீஷர்கள்*** *தனிப்படவுகளில்* ***அவருக்குப் பின்சென்று ஏறினார்கள்*** *(மாற்கு 4:36).*

***வசனம் 24.*** *இயேசுவும் அவரைப் பின்பற்றியவர்களும் கடல் பயணத்தைத் தொடங்கிய பின்பு,* ***கடலில் பெருங்காற்று உண்டாயிற்று.*** *கலிலேயாக் கடலைப் பற்றி ராபர்ட் H. மவுன்ஸ் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *பம்பர வடிவம் (எட்டு மைல்கள் அகலமும் வடக்கில் இருந்து தெற்காக பதிமூன்று மைல்கள் நீளமும்) கொண்ட ஏரி, கடல் மட்டத்தில் இருந்து 680 அடிகள் தாழ்வில் உள்ளது. இதைச் சுற்றிச் சூழ்ந்துள்ள உயர்ந்த குன்றுகள், எவ்வித எச்சரிக்கையும் இன்றி உயரங்களில் இருந்து வலிவான காற்றைத் தரவழைக்கும் மாபெரும் புனல் போன்று செயல்படும் ஆழமான கணவாய் வெட்டுக்களாக உள்ளன.*[1]

*குன்றுகள் மீது சுற்றியோடும் குளிர்ந்த காற்று, கலிலேயா பள்ளத்தாக்கின் வெதுவெதுப்பான காற்றைச் சந்திக்கும்போது, சூறாவளிக் காற்றின் செயல் விளைவு கலிலேயாக் கடலைக் கடைவது உண்டு. இந்த கடுமையான வானிலை அமைவு, இவ்வசனத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளபடி seismos கிரேக்க வார்த்தை "புயல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ஏன் என்பதை விளக்குகிறது; இந்தச் சொற்றொடர் வழக்கமாக "பூமி அதிர்ச்சி" என்பதையே குறிக்கிறது (24:7; 27:54; 28:2; நடபடிகள் 16:26; வெளிப்படுத்தின விசேஷம் 16:12; 8:5; 11:13, 19; 16:18). இந்தப் புயல்கள் தீடீர்வன்மையுடன் எழும்பக்கூடும் (காண்க 14:24).*

*சிறு மீன்பிடிப்* ***படவு*** *(ploion)* ***அலைகளினால் மூடப்பட்டது.*** *மாற்கு, "அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக. அலைகள் அதின்மேல் மோதிற்று" என்று பதிவு செய்தார் (மாற்கு 4:37). அலைகள் படகை நிரப்பிக் கொண்டிருக்கையில்,* ***இயேசு நித்திரையாயிருந்தார்.*** *உக்கிரமான காற்றோ அல்லது சுழன்று அடிக்கும் அலைகளோ கர்த்தரை உறக்கத்தில் இருந்து எழச்செய்யவில்லை. வேதவசனங்களில், ஆழ்ந்த உறக்கம் என்பது ஒருவர் தேவன் மீது நம்பிக்கை வைத்திருத்தலைக் குறிக்கிறது (யோபு 11:18, 19; சங்கீதம் 3:5; 4:8; 127:2; நீதிமொழிகள் 3:24-26; நடபடிகள் 12:6, 7).*

***வசனம் 25.*** *நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த இயேசுவுக்கு நேர்மாறாக, அவருடன் இருந்த சீஷர்கள் பயத்துடன் இருந்தனர். அப்பொழுது,* ***அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: "ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்"*** *என்றார்கள். இன்னொரு வேளையில் பேதுரு இயேசுவை நோக்கித் தண்ணீரில் நடந்தபோது மூழ்கும் வேளையில் அவரும் "ஆண்டவரே, என்னை ரட்சியும்" என்று கதறினார் (14:30).*

***வசனம் 26.*** *இயேசு விழித்து எழுந்து, அற்பவிசுவாசிகளே!* ***ஏன் பயப்படுகிறீர்கள்? என்று கூறி அவர்களைக் கடிந்துகொண்டார்.*** *"பயப்படுகிறீர்கள்" (deilos) என்ற கிரேக்க வார்த்தை, "பயமுள்ள," "கோழைத்தனமான" அல்லது "அச்சம் நிறைந்த" என்று அர்த்தப்படுகிறது. இந்த சீஷர்கள் "அற்பவிசுவாசம்" (oligopistos). கொண்டிருந்ததாக இயேசு கூறினார். இந்த கிரேக்க வார்த்தை மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் மாத்திரம் காணப்படுகிறது, மற்றும் இது இயேசுவினால் அவரது சீஷர்களைப் பற்றி விவரிக்க மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது (6:30ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசு யார் - சிருஷ்டிப்பின் தேவனுடைய குமாரன் - என்பதை இவர்கள் உண்மையாகவே ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்*

*எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வல்லவராக இருந்தார் என்பதை இவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். இயேசு பிரசன்னமாக உள்ளார் என்பதே தாங்கள் பாதுகாப்பாக இருந்தனர் என்பதை அர்த்தப்படுத்திற்று என்று இந்த சீஷர்கள் புரிந்து கொண்டிருக்கவில்லையா? இயற்கையானது தேவனுடைய நோக்கத்தைத் தோல்வியடையச் செய்ய இயலாது என்பதை இவர்கள் அறியவில்லையா? இயேசு, "அவர்கள் தங்கள் ஜெபங்களினால் தம்மை அவர்கள் தொந்தரவு செய்தனர் என்று அவர்களை இடித்துரைக்கவில்லை, ஆனால் அவர்கள் தங்கள் பயத்தினால் தங்களேயே தொந்தரவு படுத்திக் கொண்டதற்காக அவர்களைக் கடிந்துகொண்டார்."[2] அவர்களின் "அற்ப விசுவாசம்" மற்றும் தமது வேலைக்காரன் குணமாக்கப்பட்ட, நூற்றுக்கு அதிபதியின் "பெரிய விசுவாசம்" ஆகியவற்றிற்கு இடையில் உள்ள நேரெதித்தன்மை இந்த அதிகாரத்தில் கவனிக்கப்படக் கூடியதாக உள்ளது (8:10).*

*இயேசு படவில் எழுந்து நின்று,* ***காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.*** *"அதட்டினார்"* (*epitimaō*) *என்ற சொற்றொடர் வழக்கமாக, ஒரு நபரால் இன்னொருவருக்குத் தரப்படுகிற திருத்துதல் அல்லது எச்சரிக்கையையே குறிக்கிறது. இருப்பினும் இது சிலவேளைகளில் இந்த அற்புதங்கள் பற்றிய எடுத்துரைப்புகளில், இயேசு வன்மையான சக்திகளை முடிவுக்குக் கொண்டு வந்ததைக் சுட்டிக்காண்பிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர் புயலை "அதட்டியது" மட்டுமின்றி, அவர் காய்ச்சலையும் (லூக்கா 4:39) அசுத்த ஆவியையும் (லூக்கா 9:42) அதட்டினார்.*

*இயேசு, "இரையாதே, அமைதலாயிரு" என்று கூறியதாக மாற்கு அறிவித்தார் (மாற்கு 4:39). "அமைதலாயிரு" என்ற கட்டளை* phimoō *கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. இது ஒரு மிருகத்திற்கு வாய்மூடி இடுதல் என்ற கருத்தில் "வாய்மூடுதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும் (1 தீமோத்தேயு 5:18). புயலானது உடனடியாக அமைதலாயிற்று.* D. A. *கேர்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *... இயேசுவுக்குள் அரசத்துவ அதிகாரமும் ஊழியக்கார இருதயமும் ஒன்றிணைந்திருந்தன ... . இயேசு தமது ஊழியத்தின் தீவிரப் பணியினால் இளைப்படைந்தவராகப் படவில் உறங்கிக் கொண்டிருக்கிறார், இருப்பினும் அவர் இயற்கைக்கும் கர்த்தராக நிலைத்திருக்கிறார், தமது வார்த்தையினால் புயலைப் பேசாதிருக்கும்படி செய்து, கடல்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் அமைதியாக்கும் தேவனுடைய அதிகாரத்தைச் செயல்படுத்துகிறார்.*[3]

***வசனம் 27.*** *இயேசுவின் அற்புதத்தின் விளைவாக,* ***சீஷர்கள் ஆச்சரியப்பட்டனர்.*** *"ஆச்சரியப்பட்டு" என்பதற்கான* (*thaumazō*)*, கிரேக்க வார்த்தை, "மலைப்படைந்து" (8:10) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது மிகவும் திகைப்படைதலைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவர்களின் திகைப்புடன் கூடுதலாக, அவர்கள் "மிகவும் பயந்து"ம் இருந்தனர் (மாற்கு 4:41). அவர்கள் புயலில் அகப்பட்டு இருந்ததால் ஏற்பட்ட பயத்தைக் காட்டிலும் இயேசுவின் வல்லமையைக் கண்டதால் ஏற்பட்ட பயம் அதிகமாக இருந்தது. இது வரையிலும் அவர்கள் அவரது அற்புதங்கள் பலவற்றைக் கண்டிருந்தனர், இருப்பினும் அவர் இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்த முடிந்ததைக் கண்டு*

*அவர்கள் திகைப்படைந்தனர். அவர்கள், **"இவர் எப்படிப்பட்டவரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே"** என்று கேட்டுக் கொண்டனர். ஆர்ப்பரிக்கும் கடல்மீது தேவன் ஒருவரே இராஜரீக அதிகாரம் கொண்டவராக இருக்கிறார் அல்லவா (யோபு 38:8-11; சங்கீதம் 89:8, 9; 93:3, 4; 104:5-9; 106:9-12; 107:23-29).*

## *அசுத்த ஆவி பிடித்திருந்த இரு மனிதர்களைக் குணமாக்குதல் (8:28-34)*

***28அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்தபடியால், அந்த வழியாக ஒருவனும் நடக்கக் கூடாதிருந்தது.***

***29அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.***

***30அவர்களுக்குக் கொஞ்சதூரத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன.***

***31அப்பொழுது, பிசாசுகள்: நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக்கொண்டன.***

***32அதற்கு அவர்: போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது, பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டுபோயின.***

***33அவைகளை மேய்த்தவர்கள் ஓடி, பட்டணத்தில் சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும், பிசாசு பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள்.***

***34அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர் கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.***

*__வசனம் 28.__ மக்கள் கூட்டத்தில் இருந்து இயேசு விலகியிருந்த அவரது சுருக்கமான நேரம் மிக அரிதாகவே ஓய்வுள்ளதாக இருந்தது. கலிலேயாக் கடலின் புயலை அமர்த்திய பின்பு, அவர் தமது சீஷர்களுடன் வந்து **அக்கரையிலே** சேர்ந்தார் மற்றும் உடனே நாடகத்துவமான இன்னொரு சந்திப்பை எதிர்கொண்டார் (8:18ன் மீதான விளக்கவுரைகளைக் காணவும்).*

*இயேசு கரைக்கு வந்து சேர்ந்த **இடம் கெர்கெசேனர் நாடாக** இருந்தது, இதை மாற்குவும் லூக்காவும் "கதரேனருடைய நாடு" என்று அழைத்தனர் (மாற்கு 5:1; லூக்கா 8:26). லூயிஸ் அவர்கள், "இயேசு இப்போது வந்து சேர்ந்த - கப்பர்நகூமுக்கு எதிரான கடற்கரையான - இவ்விடத்தின் பெயர் பற்றிய நிச்சயமற்ற தன்மையைக் கையெழுத்துப் பிரதிகள் காண்பிக்கின்றன" என்று விளக்கம் அளித்தார்.[4] பழைய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் "கெரசேனே," "கதரேயர்" மற்றும் "கெர்கெசேனர்" என்ற மூன்று பெயர்கள்*

காணப்படுகின்றன.[5] இந்தப் பெயர்கள் மூன்று வேறுபட்ட இடங்களைக் குறிக்கின்றன: கெரஸா, கெதரா மற்றும் கெர்கேஸா.

(1) கெரஸா என்பது இன்றைய நாட்களில் "ஜெராஷ்" என்று அழைக்கப்படுகிறது, இது தெக்கப்போலியின் நகரங்களில் ஒன்றாக இருந்தது. இது கலிலேயாக் கடலின் தெற்கு - தென்கிழக்குப் பகுதியில் சுமார் முப்பத்து ஐந்து மைல்கள் தூரத்தில் இருந்தது மற்றும் இது இவ்வசப்பகுதியில் தரப்பட்ட விவரிப்புக்குப் பொருந்த வாய்ப்பு இல்லை.

(2) கதரேன், இது தெக்கபோலியின் இன்னொரு நகரமாக இருந்தது, இது கலிலேயாக் கடலில் இருந்து தென்கிழக்கில் சுமார் ஐந்து மைல்கள் தூரத்தில் இருந்தது. இது யார்மூக் நதியின் தென்பகுதியில் உள்ள உம் குயெஸ் என்ற இடத்துடன் அடையாளப்படுத்தப்படுகிறது. இதன் எல்லைப் பகுதி, மத்தேயுவின் "கெர்கெசேனர் நாட்டில்" என்ற விளக்கத்திற்குப் பொருந்தும் வகையில் கடல் வரை சென்றிருக்க வாய்ப்பு உள்ளது. இந்தக் கருத்து "திபேரியா [கடலின்] எல்லைகளில் அமையப் பெற்ற, கதராவைச் சேர்ந்த ஒரு கிராமம்" என்ற யோசிப்பஸ் அவர்களின் குறிப்பினால் ஆதரிக்கப்படுகிறது.[6] இந்த விருப்பத்தேர்வு மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

(3) கெர்கேசா என்பது கடலின் கிழக்குக் கரையின் மீது இருந்த ஒரு நகரமாகும். பலர் இதை, கிழக்குக் கரையின் நடு இடத்திற்குச் சற்று மேலே அமையப்பெற்றுள்ள, நவீன காலத்து குர்ஸி என்ற ஊராக அடையாளப்படுத்துகின்றனர். 1970களில் செய்யப்பட்ட அகழ்வு ஆராய்ச்சிகளில், முதல் நூற்றாண்டு கிராமம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது, அத்துடன் இந்த அற்புதத்தை நினைவில் கொண்டாடும் வகையில் ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பேராலயம் ஒன்றும் கண்டறியப்பட்டது.[7]

இந்தப் பகுதியில் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்ட **இரண்டுபேரை** இயேசு எதிர்கொண்டார் என்று மத்தேயு சுவிசேஷ விபரம் கூறுகையில், ஒரே ஒரு மனிதரை மாத்திரமே மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்கள் குறிப்பிடுகின்றன (மாற்கு 5:2; லூக்கா 8:27). இவ்விரு சுவிசேஷங்களில் எதுவும், ஒரே ஒரு மனிதர் தான் இருந்தார் என்று குறிப்பிடாமல், அசுத்த ஆவிகளின் சேனைகள் பிடித்திருந்த ஒருவர்மீது மாத்திரம் கவனம் குவிக்கின்றன மற்றும் அவைகளே இந்த நிகழ்ச்சியில் (இயேசுவுடன்) பேசின. அதுபோன்றே, மத்தேயு 20:30-34 வசனப்பகுதி, எரிகோவுக்கு அருகில் பார்வையற்ற இரு மனிதர்களை இயேசு குணமாக்கியது பற்றிக் கூறுகிறது, மாற்குவும் லூக்காவும் இந்நிகழ்வில் ஒரே ஒருவரை மாத்திரமே குறிப்பிடுகின்றன (மாற்கு 10:46-52; லூக்கா 18:35-43). மாற்கும் லூக்காவும் அதிக நாடகத்துவமான சந்திப்பைப் பதிவு செய்திருக்கலாம் என்பதைக் காட்டிலும் அதிகமான விசேஷித்த முக்கியத்துவம் எதுவும் இந்த வேறுபாடுகளுடன் இணைந்திருப்பதில்லை. அசுத்த ஆவி பிடித்தவர்களில் யார் அதிகம் பேசினாரோ, அவர் மீது யாரேனும் ஒருவர் கவனம் குவித்திருப்பார் என்பது வியப்புக்கு உரியதாக இருப்பதில்லை.

இந்த இரு மனிதர்களும் **பிசாசு பிடித்திருந்தவர்களாக** இருந்தனர், இவர்கள் பொல்லாத ஆவிகளால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தனர். அசுத்த ஆவிபிடித்திருத்தலின் இதுபோன்ற நிகழ்வுகள், பழைய ஏற்பாட்டில் இருந்தன என்றால் அது மிக அரிதானதாகவே இருந்துள்ளது. குறிப்பிடப்பட்ட மனிதர்களைப் பொல்லாத ஆவிகள் உண்மையிலேயே "பிடித்திருந்தனவா"

*என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது (காண்க நியாயாதிபதிகள் 9:23; 1 சாமுவேல் 16:14-23). சுவிசேஷ விபரங்களுக்குப் பிற்பாடு, புதிய ஏற்பாட்டில் ஒருசில உதாரணங்களே பதிவுசெய்யப்பட்டுள்ளன (நடபடிகள் 5:16; 8:7; 16:16-18; 19:11-16). மோரீஸ் அவர்கள் திருப்தி அடைந்துள்ளது போன்று, "வேதாகமத்தில், அசுத்த ஆவி பிடித்தல் என்பது, இயேசுவின் திரு அவதார காலத்தில் பொல்லாத ஆவிகள் இயேசுவை எதிர்ப்பதற்காகத் தனிநபர்களைப் பிடித்திருந்ததன் பகுதியாக இருந்தது" என்பது உண்மையே என்று நிச்சயமாகக் கூறலாம்.*[8]

*பிசாசு பிடித்திருந்த இம்மனிதர்கள் சமூகத்தில் இருந்து தள்ளிவைக்கப்பட்டவர்கள் போன்று,* **பிரேதக்கல்லறைகளின்** *மத்தியில் வாழ்ந்தனர், அந்தக் கல்லறைகள் "மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" (23:27). அவர்கள் மிகவும்* **கொடியராயிருந்தனர்,** *மற்றும் அது அந்தப் பகுதியில் எவரொருவரும்* **நடந்துபோவதைச்** *சாத்தியமற்றதாக ஆக்கியிருந்தது. அவர்களை அந்த நகரத்து மக்கள் தனிமைப்படுத்தி வைத்திருந்து அவர்களின் மூர்க்க வெறியையும் தீவிரமான செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கு அவர்களைக் கட்டிப்போட்டு வைத்திருந்தனர், ஆனால் அது பயன்தரவில்லை (மாற்கு 5:3, 4; லூக்கா 8:29). குறைந்த பட்சம் அந்த மனிதர்களில் ஒருவன், "எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான்" (மாற்கு 5:5). இந்த ஏழை மனிதனை அசுத்த ஆவிகளின் சேனையொன்று பிடித்திருந்ததாக மாற்கு பதிவு செய்துள்ளார். அவனது பெயரை இயேசு கேட்டபோது, "நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியன்" என்பதே பதிலாக இருந்தது (மாற்கு 5:9) ரோம லேகியோன் என்பது ஆறாயிரம் மனிதர்களை (போர் வீரர்களை) கொண்டிருந்தது, ஆனால் அது இம்மனிதர் ஆறாயிரம் அசுத்த ஆவிகளைக் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுவதில்லை. "லேகியோன்" என்ற சொற்றொடர் பெரிய எண்ணிக்கை அல்லது மாபெரும் சேனை என்பதைக் குறிக்க வந்திருந்தது.*

**வசனம் 29.** *இயேசுவைப் பார்த்த அம்மனிதர், "ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டார்" (மாற்கு 5:6). அங்கு "பணிந்துகொண்டு" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட (proskuneō) கிரேக்க வார்த்தை "ஆராதிக்க" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும், ஏனெனில் பணிந்து கொள்ளுதல் என்பது வணக்கம் செய்தல் அல்லது பயபக்தியைக் காண்பித்தலுக்கான பொதுவான சொல்விளக்கமாக இருந்தது (2:2ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இவ்விஷயத்தில், அந்த மனிதரின் சார்பாக ஆராதனை செய்யப்பட்டது என்பதைக் காட்டிலும் அசுத்த ஆவி கீழ்ப்படிந்தது என்பதே இந்தச் செயலின் அர்த்தமாக இருந்தது.*

*அந்த இரு மனிதர்களுக்குள்ளும் இருந்த அசுத்த ஆவிகள்,* **எங்களுக்கும் உமக்கும் என்ன?** *என்று சத்தமிட்டன. அவைகள் தனியே விடப்பட்டிருக்க விரும்பின; அவைகள் தங்களுக்கு இயேசு ஏதேனும் செய்வதை விரும்பவில்லை. இதேபோன்று கேள்விகள் வேத வசனங்களின் வேறிடங்களிலும் காணப்படுகின்றன (நியாயாதிபதிகள் 11:12; 2 சாமுவேல் 16:10; 19:22; 1 இராஜாக்கள் 17:18; 2 இராஜாக்கள் 3:13; 2 நாளாகமம் 35:21;*

*மாற்கு 1:24; யோவான் 2:4).*

*அசுத்த ஆவிகள், தேவனையும் இயேசுவை* ***தேவனுடைய குமாரனாகவும்*** *விசுவாசித்ததாக ஒப்பீட்டு சுவிசேஷங்கள் மூன்றுமே பதிவுசெய்கின்றன (8:29; மாற்கு 5:7; லூக்கா 8:28). இந்த விபரம், "பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" (யாக்கோபு 2:19) என்ற யாக்கோபுவின் கூற்றை உறுதிப்படுத்துகிறது. அசுத்த ஆவிகள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பது மட்டுமின்றி, அவரை தேவனுடைய பரிசுத்தர் என்று அறிக்கையும் செய்கின்றன (காண்க மாற்கு 1:24; 3:11; லூக்கா 4:41).*

*அசுத்த ஆவிகள் இயேசுவினிடத்தில்,* ***காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ?*** *என்று கேட்டன. எதிர்காலத்தில் குறிக்கப்பட்ட நாளில் தாங்கள் வேதனையுள்ள இடத்திற்கு அனுப்பப்பட இருப்பதை அவைகள் அறிந்திருந்தன (காண்க 25:41).*

*அவைகள் தங்களை "பாதாளத்திலே போகக்கட்டளையிடாதபடிக்கு" (லூக்கா 8:31) இயேசுவை கெஞ்சிக் கேட்டுக்கொண்டன. "பாதாளம்" என்பதன் ஆங்கில வார்த்தையான* "abyss" *என்பது "அளக்கவியலாத ஆழம்" என்று அர்த்தப்படுகிற, abussos என்ற கிரேக்க வார்த்தையின் ஒலியாக்கமாக உள்ளது. இது கடைசி நியாயத்தீர்ப்பு வரும்வரையிலும் அசுத்த ஆவிகள் தங்கி இருக்கும் இடத்தைக் குறிக்கிறது (காண்க 2 பேதுரு 2:4; யூதா 6).* KJV *வேதாகமம் இவ்வார்த்தையை* "bottomless pit." *என்றே வழக்கமாக மொழிபெயர்க்கிறது.* Abyss *என்பது ஆழமான, பெருஞ்சூளையின் புகையும் பயங்கரமான உயிரினங்களும் நிறைந்த இருளான பாதாளமாக வெளிப்படுத்தின விசேஷத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளது. அது சங்கிலியால் கட்டப்பட்டுப் பூட்டப்பட்டிருந்தது. அதில் நுழைபவர்களையும் அதில் இருந்து வெளியேறுபவர்களையும், திறவுகோல் ஒப்புவிக்கப்பட்ட தேவனுடைய தூதர் ஒருவர் கட்டுப்படுத்துகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 9:1, 2, 11; 11:7; 17:8; 20:1, 3). அசுத்த ஆவிகள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலம் வரும்முன்னரே, தங்களை இயேசு பாதாளக்குழிக்குள் சுற்றி வீசப்போகிறார் என்று பயந்தன.*

***வசனம் 30.*** *இயேசுவும் அசுத்த ஆவி பிடித்திருந்த மனிதர்களும் இருந்த கொஞ்சதூரத்தில்* ***அநேக பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன.*** *அவைகள் "ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள கூட்டம்" ஆக இருந்தது (மாற்கு 5:13). இந்தப் பிராந்தியம் ஒரு பகுதி புறஜாதி மக்கள் (சீரியர்கள்) வாழும் இடமாக இருந்தது,[9] பன்றிகளை வளர்க்க அவர்கள் யூதர்களைக் காட்டிலும் அதிகமாக இணக்கம் கொண்டிருந்தனர் (7:6ன் மீதான விளக்கவுரையைக் காணவும்). இஸ்ரவேல் நாட்டில் யூதர்கள் "எவ்விடத்திலும் பன்றிகளை வளர்ப்பதில்லை" என்று ரபீத்துவப் பாரம்பரியம் ஒன்று கூறுகிறது.[10]*

***வசனங்கள் 31, 32. பிசாசுகள்,*** *இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அடையாளம் கண்டுகொண்டது மாத்திரமின்றி (8:29) அவைகள் தங்களைத் துரத்துவதற்கு இயேசு கொண்டிருந்த வல்லமையையும் அறிந்திருந்தன. அவைகள் இயேசுவினிடத்தில்,* ***நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும்*** *என்று வேண்டிக்கொண்டன. டொனால்டு A. ஹேங்கர் அவர்கள் தகுதிவாய்ந்த பின்வரும் முன்னெச்சரிக்கையைக் கொடுத்துள்ளார்:*

*இந்த இடத்தில், அசுத்த ஆவிகள் இந்த வேண்டுகோளை ஏற்படுத்தியது ஏன் (வசனம் 31)? அவற்றின் வேண்டுகோளை இயேசு ஏற்றுக்கொண்டது ஏன் (வசனம் 32)? மற்றும் பன்றிகள் மூழ்கிப்போனபோது அசுத்த ஆவிகளின் கதி என்னவாயிற்று (வசனம் 32)? என்பது போன்ற, விளக்கவுரையாளர் பதில் அளிக்கப் போதிய விபரம் கொண்டிராத வசனரீதியான கேள்விகளை வாசகர் கொண்டுவருவார் என்பதில் சந்தேகம் இல்லை. இவற்றிலும் இவற்றைப் போன்ற மற்ற கேள்விகளிலும், அசுத்த ஆவிகளின் மனரீதியான மற்றும் மனோதத்துவரீதியான உலகம் பற்றிய அறிவில்லாமல் இருக்கும் நிலையில், யூகங்கள் மாத்திரமே ஒரே ஆதாரமூலமாக உள்ளது.*[11]

பன்றிகளுக்குள் போகவேண்டும் என்ற அசுத்த ஆவிகளின் வேண்டுகோள், பாதாளக்குழியில் இருந்து தப்பித்தலுக்கான முயற்சியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. அந்தச் சிறையிருப்பைக் காட்டிலும் பன்றிக்குள் குடியிருத்தல் என்பது சற்றுச் சிறந்ததாக இருந்தது! மத்தேயு 12:43-45 வசனப்பகுதியும்கூட, அசுத்த ஆவிகள் ஒரு உடலினுள் சென்று குடியிருக்காத வரையில் இளைப்பாறுதலைக் கண்டடைவது இல்லை என்று சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும், ஒன்றுமறியாதது போன்று காணப்படும் அவற்றின் வேண்டுகோளுக்குள் கெடுமதியான கூறு ஒன்று பதுங்கி இருக்கலாம். பன்றிகளுக்குள் செல்வதற்கு முன்னர், அழிக்கும் விருப்பம் ஒன்றை அவைகள் கொண்டிருந்தனவா? அப்படிப்பட்ட செயல்பாடானது இயேசுவுக்கு எதிரான மக்கள் கூட்டத்தைத் திருப்பிவிடும் என்று அறிந்து, இந்த மாபெரும் பன்றிக் கூட்டத்தை அழிப்பதற்கு அவைகள் விருப்பம் கொண்டிருந்தனவா? இது அவற்றின் விருப்பமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இதுவே விளைவாயிற்று என்பது நிச்சயம்.

கர்த்தடைய எளிய ஒரு வார்த்தையினாலான, **போங்கள்** என்ற கட்டளை வெளிப்பட்ட உடனே, அசுத்த ஆவிகள் **பன்றிக்கூட்டத்திற்குள்** புறப்பட்டுப் போயின. பித்தம் கொண்ட பன்றிகள் காட்டுத்தனமாக ஓடி உயர்ந்த மேட்டிலிருந்து **கடலிலே பாய்ந்து மூழ்கிமடிந்து போயின**. அதற்குப் பின்பு அந்த அசுத்த ஆவிகளுக்கு என்ன நடந்தது என்று நமக்குத் தெரியாது. இதைப்பற்றி நாம் பின்வரும் கூற்றில் நிச்சயம் கொண்டிருக்க முடியும்: அவைகள் பொல்லாத ஆவிக்குரிய ஜீவிகளாக இருந்ததால், மூழ்கடிக்கப்படுதல் மூலம் அவைகள் அழிக்கப்பட இயலாதவையாக இருந்தன. அந்த வழியில் அவைகள் அழிக்கப்பட முடியும் என்று அவைகள் அறிந்திருந்தால், அவைகள் அந்தப் பன்றிகளைக் கடலுக்குள் துரத்தியிருக்க மாட்டா. அசுத்த ஆவிகள் இயல்பாகவே அழிக்கும் தன்மை கொண்டிருக்கையில், அவைகள் சுயமாகத் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளக் கூடியவையாக இருப்பதில்லை.

**வசனம் 33.** அவைகளை **மேய்த்தவர்கள்** அவற்றின் உரிமையாளர்கள் அல்ல, ஆனால் உரிமையாளர்களுக்காக இந்தப் பெரிய மந்தையைப் பராமரிக்கும் பொறுப்பு தரப்பட்டிருந்த கூலியாட்களாக இருந்தனர் என்பது தெளிவு. இது புறஜாதியாரின் பகுதியாக இருந்ததால், தங்களுக்காக பன்றிகளைப் பார்த்துக்கொள்ளும்படி மற்றவர்களைக் கூலிகள் அமர்த்தியிருந்த புறஜாதியாருக்கு அப்பன்றிகள் உரிமையானவைகளாக இருந்திருக்க அதிக

*வாய்ப்பு உள்ளது.*

*நடந்தவற்றைப் பற்றித் திகைப்படைந்த கூலியாட்கள்,* ***ஓடி, பட்டணத்தில் சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும் ... அறிவித்தார்கள்.*** *அழிந்துபோன பெரிய பன்றிக் கூட்டத்தின் பொருள் கிரையப் பொறுப்பை ஏற்க அவர்கள் விரும்பவில்லை என்பது நிச்சயம்.* ***பிசாசு பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும்*** *பன்றி மேய்த்தவர்கள் மக்களுக்குத் தெரிவித்தனர்.*

***வசனம் 34.*** *பன்றி மேய்த்தவர்கள் கொடுத்த அறிக்கை ஒரு பெரிய கொந்தளிப்பை உண்டாக்கிற்று, மற்றும்* ***அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர் கொண்டுவந்தனர்.*** *அவரைக் கண்டபோது ஜனங்கள் என்ன கண்டார்கள்? மாற்கு யாரை நோக்கி கவனம் குவித்திருந்தாரோ அந்த மனிதன் - சந்தேகமின்றி இன்னொருவருடன் சேர்ந்து - "வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருந்தான்" (மாற்கு 5:15). இயேசு, கொந்தளிக்கும் புயலை அமர்த்தியது போன்றே (8:26), வன்முறையாளரான இவ்விரண்டு மனிதர்களின் வாழ்விலும் அமைதியைக் கொண்டுவந்தார்.*

*மக்கள் தாங்களே இயேசுவை அணுகிய பின்பு,* ***தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.*** *பன்றிகள் இழப்பினால் மக்கள் நிலைகுலைந்து போயினர் என்று சிலர் நம்புகையில், மாற்குவின் சுவிசேஷம் இந்தப் பிரச்சனைக்கு இன்னொரு காரணத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது: இயேசுவின் அச்சமூட்டும் வல்லமையைக் கண்டு அவர்கள் "பயந்தார்கள்" (மாற்கு 5:15). முன்பு அசுத்த ஆவி பிடித்திருந்தவர்களை - மற்றும் ஒருவேளை பன்றிகளின் சடலங்கள் கடலில் மிதப்பதை - கண்டபோது, பன்றி மேய்த்தவர்களின் சாட்சியத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது.*

*குணமாக்கப் பட்டிருந்த மனிதன் இயேசுவினிடத்தில் "அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக்கொண்டான்" (மாற்கு 5:18). கர்த்தர் "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று" பதில் அளித்தார் (மாற்கு 5:19). இதன் விளைவாக அம்மனிதன், "போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான், எல் லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற்கு 5:20).*

## *திமிர்வாதக்காரரைக் குணமாக்குதல் (9:1-8)*

*இந்த எடுத்துரைப்பு, இயேசு ஒரு திமிர்வாதக்காரரைக் குணமாக்கி அந்த மனிதரின் பாவங்களை மன்னித்து நகரில் இருந்த அறை ஒன்றில் இருந்து வருகிறது. யூதத்தலைவர்கள் இயேசுவின் மீது தேவதூஷணக் குற்றம் சாட்ட, மக்கள் அவரது அற்புதமான செய்கைகளைக் கண்டு திகைத்துப்போய் தேவனைத் துதித்தனர்.*

***1 அப்பொழுது, அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்.***

***2 அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு,***

***திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.***

***3அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக் கொண்டார்கள்.***

***4இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?***

***5உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நட வென்று சொல்வதோ, எது எளிது?***

***6பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி. திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுப் போ என்றார்.***

***7உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்.***

***8ஜனங்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.***

*__வசனம் 1.__ கதரா பகுதியில் இயேசு திகைப்புக்குரிய அற்புதம் நிகழ்த்தியிருந்த போதிலும், அந்த நகரத்தார் யாவரும், தங்கள் நகரத்தை விட்டுப் போகும்படி, இயேசுவிடம் வேண்டிக் கொண்டனர். அதை ஒப்புக்கொண்ட அவர், ஒரு சிறிய படவில் ஏறி, இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்திற்கு வந்தார். ஒரு "படகு" மற்றும் "இக்கரைப்படுதல்" பற்றிய இதேபோன்ற குறிப்புகள் முந்திய அதிகாரத்தில் காணப்படுகின்றன (8:18, 23, 28), இது இயேசு கடலுக்கு அருகாமையில் அமைந்திருந்த நகரங்களுக்கு இடையில் போக்கும் வரத்துமாக இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன.*

*இயேசு, புறஜாதியார் பெரும்பான்மையாக இருந்த கடலில் கிழக்குப் பகுதியில் இருந்து, யூதர்கள் பெரும்பான்மையாக இருந்த மேற்குப் பகுதிக்குத் திரும்பினார். காலத்தில் அவர், கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையில் இருந்த, கப்பர்நகூம் என்ற __தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்__ (4:13ன் மீதான விளக்கங்களைக் காண்க). இவ்வேளையில் முன்பு போலவே அவர், பேதுரு மற்றும் அவரது குடும்பத்துடன் தங்கி இருந்திருக்கலாம் (8:5, 14; மாற்கு 1:21, 29; 2:1).*

*__வசனம் 2.__ முன்பு இயேசு, மக்கள் கூட்டம் தம்மை நெருக்கியதாலும், ஒருவேளை உடல்ரீதியான களைப்பினாலும், கப்பர்நகூம் ஊரை விட்டுச் சென்றிருக்கலாம் (8:18; காண்க மாற்கு 1:35-38; லூக்கா 5:15, 16). இருப்பினும் அவர் "தம்முடைய பட்டணத்திற்கு" திரும்பி வந்தார். அவரது வருகை பற்றிய செய்தி விரைவில் பரவிற்று. மீண்டும் ஒருமுறை மக்கள் கூட்டம் அவரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டது, அவர்கள் தங்களின் வியாதிப்பட்டு இருந்தவர்களை குணமாக்கும்படி அவரிடம் கொண்டு வந்தனர்; மற்றும் தேவனுடைய பரிவிரக்கத்தின் மாபெரும் வெளிப்படுத்துதலாக அவர்கள் மீது அவர் இரக்கம் கொண்டார் (9:8; மாற்கு 2:1, 2; லூக்கா 5:15).*

*மற்ற இரண்டு ஒப்பீட்டு சுவிசேஷங்களில் உள்ளது போன்று (மாற்கு 2:1-12; லூக்கா 5:17-26), மத்தேயு, __படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனைப்__*

பற்றி அதிக விபரங்களை அளிப்பதில்லை. அந்த மனிதரின் திமிர்வாதம், அவர் இயேசு இருந்த இடத்திற்கு (தாமே நடந்து வர இயலாமல்) பிறர் தூக்கிக் கொண்டு வருமளவுக்கு அவ்வளவு கடுமையாக இருந்தது என்பது தெளிவு.

இந்த மனிதர் நான்கு நண்பர்களால் அவரிடத்தில் **கொண்டுவரப்பட்டபோது,** வீட்டில் இருந்த மக்கள் கூட்டம் காரணமாக, அவர்கள் இயேசுவிடம் நெருங்கி வர இயலாதிருந்தனர் என்று மாற்குவும் லூக்காவும் கூறினர் (மாற்கு 2:4, 5; லூக்கா 5:19). கூர்மதியுடன் அவர்கள், அனேகமாக சமதளப் பரப்பாக இருந்த அந்த வீட்டின் கூரையின்மீதேறி, கூரையின் பகுதிகள் சிலவற்றைப் பிரித்து ஒரு திறப்பை உண்டாக்கினர். அம்மனிதரை இயேசுவினிடம் கொண்டு செல்ல ஒரு வழியை ஏற்படுத்திய பின்பு, அவர்கள் அம்மனிதரை, கூரையின் வழியே, இயேசு அமர்ந்திருந்த இடத்திற்கு இறக்கினார்கள் (மாற்கு 2:3, 4; லூக்கா 5:18, 19).

அந்த நான்கு மனிதர்களின் **விசுவாசம்** மற்றும் அவர்களின் பாடுகள் ஆகியவற்றைக் கண்ட இயேசு அம்மனிதருக்குச் சொன்ன முதல் வார்த்தைகள், **மகனே, திடன்கொள்** என்பதாக இருந்தன. "திடன்கொள்" என்பதற்கு இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள (*tharseō*) கிரேக்க வார்த்தை, பயத்தை நீக்கிப் போடும் சிந்தனையின் வகையைச் சுட்டிக்காண்பிக்கின்றன. அவரிடத்தில் கர்த்தர், "பயப்படாதே" என்று கூறினார். **திமிர்வாதக்காரர்** பயப்பட்டு இருப்பதற்குக் காரணம் கொண்டிருந்தார் என்பது நிச்சயம்: தமது உடல்நிலை மிகமோசமாகுதல். தமது நண்பர்கள் செய்தது பற்றி இந்தப் பெரும்கூட்டம் என்ன பதில்செயல் செய்யுமோ என்பது மற்றும் மிக முக்கியமாக, இப்படிப்பட்ட வல்லமை உள்ளவரின் பிரசன்னத்தில் தாம் இருந்தது போன்ற விஷயங்கள் அவரைப் பயமுறுத்தி இருக்கலாம்.

"மகன்" என்பதற்கான (*teknon*) வார்த்தை "பிள்ளை" என்று மொழிபெயர்க்கப்பட முடியும். (NJB) இதை CEV வேதாகமம் "நண்பன்" என்று மொழிபெயர்த்துள்ளது. இது எந்த வயதும் அல்லது பாலினமும் கொண்ட பிள்ளையொன்றை, அல்லது நெருங்கிய, தனிப்பட்ட தொடர்புடைய எந்த ஒரு நபரையும் குறிக்கக் கூடும். லூக்கா 5:18ம் வசனம் இந்த திமிர்வாதக் காரரை "மனுஷனே" என்று அடையாளப்படுத்துவதால், இயேசு இவ்வார்த்தையை பிரியத்தின் சொற்றொடராகவே பயன்படுத்தி இருக்க அதிக வாய்ப்பு உள்ளது.

**உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது** என்பதே அம்மனிதருக்கு இயேசுவின் அடுத்த வார்த்தைகளாக இருந்தன. இப்படிப்பட்ட உறுதிப்பாட்டை இயேசு ஏற்படுத்திய இரண்டே இரண்டு வேளைகளில் இது ஒன்றாக இருந்தது (9:2; லூக்கா 7:48; காண்க லூக்கா 23:43).

இயேசு தமது நாட்களில் இருந்த, எல்லா வியாதிகளும் பாவத்துடன் தொடர்புடையது என்ற பிரபலமான கண்ணோட்டத்தை நீக்கிப்போட அதிகமான செயல்களைச் செய்தார் (லூக்கா 13:1-5; யோவான் 9:1-3).[12] பின்பு ஏன் அவர் இவ்வார்த்தைகளைக் கொண்டு இம்மனிதரை அணுகினார்? ஒருவேளை, பாவம் என்பதே முதலாவது கையாளப்பட வேண்டிய விஷயம் என்பதால் இயேசு இவ்வாறு செய்திருக்கலாம். அவரைச் சுற்றியிருந்த மக்கள் கூட்டம், தல்மூத் என்ற புத்தகத்தில் பிற்பாடு பதிவுசெய்யப்பட்டதும், தங்கள் காலத்தில் வாய்மொழிப் போதகமாக இருந்ததுமான பின்வரும் போதனையைப் பற்றி நன்கு அறிந்திருக்கலாம்: "வியாதிப்பட்ட மனிதர் ஒருவர்

*தமது பாவங்கள் மன்னிக்கப்படாத வரையிலும் தமது வியாதியில் இருந்து குணமாவதில்லை."*[13] அம்மனிதரின் வியாதி, பாவத்தின் விளைவாக ஏற்பட்டு இருந்தது என்பது உண்மையாக இருக்கக் கூடிய இன்னொரு சாத்தியக் கூறும் உள்ளது, சிலவேளைகளில் இதுவே விஷயமாக உள்ளது (யாக்கோபு 5:14-16). உண்மையில் அம்மனிதரே, பாவத்தின் விளைவாகத் தாம் திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்டதாக நம்பியிருக்கலாம். உண்மையான சூழ்நிலை எதுவாக இருந்தபோதிலும், இயேசுவின் வார்த்தைகள் அம்மனிதருக்கு உடனடி நிம்மதியைக் கொண்டு வந்திருக்கும்.

**வசனம் 3.** மன்னிப்பிற்கான கர்த்தரின் அறிவித்தலானது, இந்தப் புதிய போதகரின் ஊழியத்தின் இயல்பைப் பற்றி முடிவுசெய்ய அங்கு வந்திருந்தவர்களின் விரோத உணர்வைத் தூண்டி எழுப்பிற்று. அவரது போதனைகள் மக்கள் மத்தியில் எழுச்சிக்குக் காரணமாக இருந்தன, எனவே "கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள்" (லூக்கா 5:17). முன்பு அவர்மீது பகையுணர்வு எதையும் காண்பித்திராத **வேதபாரகரில் சிலர்,** அங்கிருந்த பரிசேயர்களுடன் சேர்ந்துகொண்டு (லூக்கா 5:21), தேவனை அவர் தூஷித்ததாகக் குற்றம் சாட்டினர். அவர்கள் தங்கள் இருதயங்களில், **இவன் தேவதூஷணம் சொல்லுகிறான்** என்றும் "தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்?" என்றும் (மாற்கு 2:7) கூறிக்கொண்டனர். பாவங்களை மன்னித்தல் என்பது தேவனுக்கு மாத்திரமே உரிய தனியுரிமை என்று அவர்கள் கண்டனர் (சங்கீதம் 103:12; ஏசாயா 1:18; 43:25; 55:6, 7; எரேமியா 31:34; மீகா 7:18, 19).

**வசனம் 4.** இந்த நிகழ்வு, இயேசுவின் மீது முறைப்படியான வெறுப்புணர்வு தொடங்கும் இடமாக இருந்தது. மத்தேயு சுவிசேஷத்தின்படி, தேவதூஷணக் குற்றம் உரத்த சத்தமாகக் கூறப்படவில்லை. இயேசுவைக் குற்றம் சாட்டியவர்கள் "தங்கள் உள்ளத்தில்" அல்லது "தங்களுக்குள்" பேசிக்கொண்டனர் (9:3; KJV). இருப்பினும் **இயேசு** அவர்கள் **நினைவுகளை** அறியக் கூடியவராக இருந்தார் (காண்க 12:25; 22:18; லூக்கா 9:47; யோவான் 1:47, 48; 2:25; 21:17). அவர்களிடம் அவர், **நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?** என்று கேட்டார். இந்தக் கேள்வி மாத்திரமேகூட, அவரது தெய்வீகத்துவம் பற்றிச் சந்தேகப்படுபவர்களை இணங்கச் செய்திருக்க வேண்டும். அவர்களின் சிந்தனைகளை மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் சிந்தனைகளுக்குப் பின்னால் இருந்த பொல்லாத விஷயங்களையும் அவர் வெளிப்படுத்தினார். "பொல்லாதவிஷயம்" என்பது "பொல்லாத செயல்களுக்கான திட்டத்தைக் குறிப்பிடலாம். ஆனால் இது இயேசுவைப் பற்றி மோசமாக நினைப்பதை மாத்திரம் கூறுவதாயிருக்கவே அதிக சாத்தியம் உள்ளது."[14] வேதபாரகர், தேவனுடைய மதிப்பைப் பாதுகாத்ததன் மூலம் தாங்கள் நன்மை செய்ததாக நினைத்திருக்கையில், அவர்கள் உண்மையில் தேவனுடைய குமாரனை எதிர்த்து நிற்றல் மூலமாக பொல்லாதவற்றையே செய்தனர். கிறிஸ்துவை எதிர்த்து நிற்றல் தேவனை எதிர்த்து நிற்றலாக உள்ளது. இயேசு, "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 5:23).

***வசனம் 5.*** *பின்பு இயேசு, சொல்லாடல் கலையின் வடிவத்தில் கேள்வியொன்றைக் கொண்டு அவர்களுக்குப் பதில் அளித்தார்:* ***உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?*** *ஒரு மட்டத்தில், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று கூறுதல் எளிது ஏனெனில் அந்தக் கூற்றின் மதிப்பைப் பார்ப்பவர்கள் உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ எவ்வழியும் இல்லாதிருந்தது. இதற்கு நேர்மாறாக, "எழுந்து நட" என்று கூறுதல், திமிர்வாதக்காரரின் பதில் செயலைக் கொண்டு சுலபமாக மதிப்பிடக் கூடியதாக இருந்தது. அம்மனிதர் பதில் செயல் செய்யவில்லை என்றால், இயேசு ஒரு மோசடிக்காரர் என்று வெளிப்படுத்தப்படுவார்.*

*இன்னொரு மட்டத்தில்,* ***உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது*** *என்று கூறுதல் உண்மையிலேயே அதிக கடினமானதாக இருந்தது, ஏனெனில் மன்னிப்பு அளித்தல் என்பது தெய்வீக உரிமைத்துவமாக மாத்திரம் இருக்கிறது. ஒரு மனிதருக்கு மற்றவரின் உடல்ரீதியான குணமாக்கும் வல்லமை தரப்பட்டு இருக்கலாம், ஆனால் இது பாவங்களுக்கு மன்னிப்பை உரைக்க உரிமை கொண்டிருந்தார் என்று அர்த்தப்பட்டுவிடாது. தேவனுடைய தெய்வீக குமாரன் என்ற வகையில் இயேசு, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று கூறுதல் "எழுந்து நட" என்று கூறுதலைப் போன்றே தமக்கு சுலபமானதாக இருந்தது என்பதைத் தம்மை விமர்சிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். சரீரத்திற்குரிய வகையிலும் ஆவிக்குரிய வகையிலும் குணமாக்கும் வல்லமையைத் தாம் கொண்டிருந்ததை அவர் விளக்கப்படுத்தினார்.*

***வசனங்கள் 6, 7.*** *எஜமானர், இயற்கை உலகத்தின் மீதும் ஆவிக்குரிய உலகத்தின்மீதும் தமக்கு இருந்த அதிகாரத்தைக்* ***காண்பித்திருந்தார்,*** *மற்றும் இங்கு அவர், நித்திய உலகத்தில் தாம் கொண்டிருந்த அதிகாரத்தை செயல்படுத்தினார் (காண்க 7:28, 29; 8:9 ஆகியவற்றிற்கான விளக்கங்கள்). வானத்தில் இருந்தாலும் அல்லது* ***பூமியிலே இருந்தாலும்,*** *அவர்* ***பாவங்களை மன்னிக்க*** *அதிகாரம் கொண்டிருந்தார். இந்த அதிகாரம்* ***மனுஷகுமாரன்*** *என்ற இயேசுவின் சுயகுறிப்புப்பெயரை உறுதிப்படுத்துகிறது - தானியேல் 7:13, 14 ன் தீர்க்கதரிசனத்தில், நீண்ட ஆயுசுள்ளவர், மனுஷகுமாரனை, "கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும்" உடையவராக முன்வைத்தார்.*

*பாவங்களை மன்னிக்க இயேசு கொண்டிருந்த அதிகாரத்திற்கு ஆதாரமாக, அவர்* ***திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.*** *அம்மனிதர் தமது படுக்கையுடன் இயேசுவினிடத்தில் சுமந்து வரப்பட்டிருந்தார் (9:2); அவர் தமது சொந்தப்படுக்கையைச் சுமந்து கொண்டு வீட்டிற்குத் திரும்பும்படி கூறப்பட்டார். மவுன்ஸ் அவர்கள், "இயேசுவின் நாட்களில், பெரும்பான்மையான மக்கள், தரையில் படுக்கை விரிப்பு போன்ற ஒன்றை விரித்து அதில் உறங்கினர். இவ்வாறு அந்த படுக்கை என்பது சிரமம் இன்றித் தூக்கிச் செல்லக்கூடிய mat* [NIV] *அல்லது தூக்குக் கட்டிலாக இருந்திருக்க வேண்டும்" என்று விளக்கப்படுத்தினார்.*[15] *அந்த மனிதர் எந்தத் தயக்கமும் இன்றி இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து* ***எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்.*** *இதன் விளைவாக, உடலைக் குணப்படுத்தும் இயேசுவின் வல்லமையானது, ஆத்துமாவைக் குணமாக்க அவர் கொண்டிருந்த*

*வல்லமைக்குச் சாட்சியளித்தது.*

***வசனம் 8.*** *சுமந்து கொண்டுவரப்பட்ட அந்த மனிதர் உண்மையிலேயே எழுந்து, தமது படுக்கையை எடுத்துக் கொண்டு அந்த வீட்டில் இருந்து நடந்து வெளியேறியதைக் கண்ட* ***ஜனங்கள்*** *ஆச்சரியப்பட்டனர். மாற்கு 2:12ம் வசனம், "உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான்" மற்றும் மக்கள் "எல்லாரும் ஆச்சரியப்பட்டனர்" என்று கூறுகிறது. மத்தேயு,* ***அவர்கள் பயத்தினால் தாக்கப்பட்டனர்*** *என்று எழுதினார் (ஆனால் தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு என்றே உள்ளது). இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள phobeō, என்ற கிரேக்க வினைச்சொல்,* "phobia" *என்ற வார்த்தை தரவழைக்கப்பட்ட, phobos என்ற பெயர்ச்சொல்லுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்தச் சொற்றொடர்கள் அடிக்கடி, "பயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டாலும், புதிய ஏற்பாட்டில் இவைகள் சிலவேளைகளில், "பயபக்தியுடன் கூடிய திகைப்பு" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன (லூக்கா 1:50; 18:2, 4; நடபடிகள் 10:35; 13:16, 26; ரோமர் 3:18; 2 கொரிந்தியர் 5:11; 7:1; கொலோசெயர் 3:22; 1 பேதுரு 1:17; 2:17; வெளிப்படுத்தின விசேஷம் 11:18; 14:7; 19:5). இந்தக் கவனிப்பாளர்கள்,* ***மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*** *அவர்கள் பயமடைந்திருந்தால் தேவனைத் துதித்து இருப்பார்கள் என்பது மிக அரிதாகவே நம்பத்தக்கதாக இருந்திருக்கும்.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *"இயேசு யார்?" (மத்தேயு 8:27)*

*இயேசு புயலை அமர்த்திய பின்பு, திகைப்படைந்த சீஷர்கள், "இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இருவருக்குக் கீழ்ப்படிகிறதே" என்று ஒருவர் மற்றவரைக் கேட்டுக் கொண்டனர் (8:27). மாற்கு சுவிசேஷ விபரத்தில் அவர்கள், "இவர் யாரோ ... ?" என்று கேட்டனர் (மாற்கு 4:41;* NLT*). சுவிசேஷங்களில், இயேசுவின் அடையாளத்துவம் பற்றிய கேள்வி மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இயேசு ஞானஸ்நானம் பெற்ற போதும் மறுரூபப்பட்டபோதும், அவரை தேவன் தமது குமாரன் என்று அடையாளப்படுத்தினார் (3:17; 17:5). சாத்தான் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று உணர்ந்து அறிந்து, அவரைச் சோதிப்பதற்கு இந்த உண்மையை அடித்தளமாகப் பயன்படுத்தினான் (4:3, 6). அசுத்த ஆவிகளும் இயேசுவின் தெய்வீகத்துவத்தை உணர்ந்து அறிந்தன (8:29). இருப்பினும், இயேசுவின் அடையாளத்துவம் யூத மக்கள் மத்தியில் அடிக்கடி விவாதம் செய்யப்பட்டது (16:13, 14; மாற்கு 6:14-16; யோவான் 7:40-44). இயேசுவின் சொந்த சீஷர்களேகூட உண்மையில் அவர் யாராக இருந்தார் என்பது பற்றி அடிக்கடி நிச்சயமற்றவர்களாக இருந்தனர். இவ்விஷயத்தில் இயேசு அவர்களிடம் கேள்வி கேட்டபோது, பேதுரு நல்ல அறிக்கையைச் செய்தார்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (16:16). இருப்பினும் அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்னும் கூட, சீஷர்களில் சிலர் சந்தேகப் பட்டுக்*

கொண்டிருந்தனர் (28:17).

"இயேசு யார்?" என்பது இன்றைய நாட்களில் ஒருவர் பதில் அளிக்கக் கூடிய மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. தேவகுமாரனாகிய இயேசு, நித்திய ஜீவனுக்கான ஒரேவழி என்று தம்மைத் தாமே அடையாளப்படுத்தினார் (யோவான் 14:6; காண்க நடபடிகள் 4:12). மேலும் அவர், "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்றும் உரைத்தார் (யோவான் 8:24; NIV). நல்லறிக்கையைச் செய்தல் என்பது, இரட்சிப்புக்கு வழிநடத்தும் தேவனுடைய கிருபைக்கு மனிதரின் விசுவாச பதில் செயலின் **பாகமாக** உள்ளது (10:32, 33; நடபடிகள் 8:37; ரோமர் 10:9, 10; 1 தீமோத்தேயு 6:12). இயேசுவின் அடையாளத்துவம் பற்றிய கேள்விக்கு நாம் எவ்வாறு பதில் அளிக்கிறோம் என்பது நமது நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கிறது.

டேவிட் ஸ்டீவர்ட்

## அசுத்த ஆவிகள் (8:28-34)

அசுத்த ஆவிகளின் தோற்றுவாய் பற்றிப் பல ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. அவைகள் பூமியில் வட்டமிட்டுத் திரிந்து கொண்டிருந்த பொல்லாத மனிதர்களின் ஆவிகளாக இருந்தன என்று சிலர் நம்புகின்றனர். இருப்பினும், ஒரு நபர் திரும்பவந்து இன்னொரு நபருடைய உடலில் வாழ்ந்ததற்கு உதாரணம் ஒன்று ஒருக்காலும் இருந்ததில்லை. அவைகள் பொல்லாத வேலையைச் செய்யும்படிக்குத் தேவனால் படைக்கப்பட்ட உயிர்கள் என்று மற்றவர்கள் நம்புகின்றனர். தொடக்கத்தில் தேவன் படைத்த யாவும் "மிகவும் நன்றாயிருந்தது" என்பதால் (ஆதியாகமம் 1:31), இந்தக் கண்ணோட்டம் புறக்கணிக்கப்பட்டாக வேண்டும். ஒருவேளை அவைகள், விழுந்து போன தூதர்களாக (2 பேதுரு 2:4; யூதா 6), இப்போது சாத்தானுடைய தலைமைத்துவத்தின் கீழ் உள்ள தூதர்களாக (12:24; 25:41; மாற்கு 3:22, 23) இருக்கின்றன என்பது மிகவும் தர்க்கவாதப் பொருத்தமான பதிலாக உள்ளது எனலாம்.

அசுத்த ஆவி பிடித்தல் என்பது முற்றிலும் தனிப்பட்ட வகையில் புதிய ஏற்பாட்டுக் கருதுகோளாக உள்ளது என்பது, அசுத்த ஆவிகளைப் பற்றிய படிப்பில் உள்ள தனிக்குறிப்பிட்ட ஒரு விஷயமாகும். சவுல் அரசரை அலைக்கழித்த "பொல்லா ஆவி" பற்றிய குறிப்பு உள்ளது (1 சாமுவேல் 16:14-23). அது என்னவாக இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டில் அசுத்த ஆவி பிடித்தல் என்பதில் இருந்து அது மிகவும் வேறுபட்டுள்ளது. எவரேனும் ஒருவருடைய உடலை அசுத்த ஆவி கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டதாக ஒரு உதாரணம்கூடப் பழைய ஏற்பாட்டில் இல்லை.

சாத்தான்மீது தேவன் கொண்டுள்ள மேலான வல்லமையைச் செயல்விளத்தப்படுத்துவதற்காகத் தேவன், முதல் நூற்றாண்டில் அசுத்த ஆவிகள் மனிதரைப் பிடித்து அவர்களுக்குள் வாசம் பண்ணுவதை அனுமதித்திருக்க வேண்டும். சுவிசேஷங்களிலும் அப்போஸ்தலருடைய நடபடிகளிலும், அசுத்த ஆவி பிடித்திருத்தல் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கையில், புதிய ஏற்பாட்டின் பிந்திய புத்தகங்களில் அவ்வாறான குறிப்புகள் எதுவும் இல்லை. அசுத்த

*ஆவிகளைத் துரத்தும் வல்லமை இல்லாது போனபோது, அசுத்த ஆவிகள் மனிதர்களைப் பிடித்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்பதே தர்க்கவாதப் பொருத்தமான முடிவாக உள்ளது.*

*அசுத்த ஆவிகளைத் துரத்துதலைக் குறிப்பிடுவதற்குப் புதிய ஏற்பாட்டில், "மந்திர உச்சாடனத்தினால் துரத்துதல்" என்று அர்த்தப்படுகிற,* "exorcise" (*exorkizō*), *என்ற சொற்றொடர் ஒருக்காலும் பயன்படுத்தப்படவில்லை. இச்சொல்லானது, ஒரு நபரைப் பிடித்திருப்பதாக நம்பப்படும் அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்கென்று வடிவமைக்கப்பட்ட மந்திரவாசகங்களின் சடங்காச்சாரத்தைக் குறிப்பிடுகிறது. இன்றைய நாட்களில், அறியாமை உள்ளவர்களை ஏமாற்றவும் அவர்களின் பணத்தை சந்தேகத்திற்கு இடமின்றி கவர்ந்து கொள்ளவும், விஷயம் தெரிந்தவர் போல் நடிப்பவர்களால், மந்தி ரித்துப் பேயோட்டுதல் என்பது பயன்படுத்தப்படுகிறது. இன்றைய நாட்களில் மக்களின் உடல்களில் அசுத்த ஆவிகள் இன்னமும் வாசம் பண்ணுகின்றன என்று சிலர் நம்புகின்றனர்.* Lynn A. McMillon *அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *நாமகரணக் கூட்டத்து ஊழியக்காரர்களாலும் கலாச்சார ரீதியாகப் பின்தங்கியுள்ள நாடுகளை ஆராய்ச்சி செய்யும் சமூகவியலாளர்களாலும், அசுத்த ஆவிகள் பிடித்தல் என்ற விஷயங்கள் அறிக்கை செய்யப்படுகின்றன. இவ்வாறு (அசுத்த ஆவி) பிடித்திருக்கும் கதைகள், சீனா, இந்தியா, போர்னியோ மற்றும் ஆப்பிரிக்கா போன்ற தூரப் பகுதிகளில் இருந்தே வழக்கமாக வருகின்றன. நாகரீகமும் கல்வியறிவும் வளர வளர, அசுத்த ஆவி பிடிக்கும் விஷயங்கள் குறைந்து வருவதை சமூக உளவியல் அறிஞர்கள் உற்றுக் கவனிக்கின்றன, எனவே, உயர்ந்த மேம்பட்ட தொழில் நுட்ப சமூகங்களைக் காட்டிலும் அதிகமாக, கலாச்சார ரீதியாகவும் கல்விரீதியாகவும் தாழ்நிலையில் உள்ள சமூகங்களில் இருந்தே, அசுத்த ஆவி பிடித்தல் பற்றிய அதிகமான நிகழ்வுகள் காணப்படுவதை ஒருவர் எதிர்பார்க்க முடியும். அசுத்த ஆவிகள் பிடித்தல் ஏற்றுக்கொள்ளப்படும் பகுதிகளில், அது விலகிய நடத்தையின் வடிவங்கள் பலவற்றிற்கு ஒரு விளக்கமாகிறது. இந்த உண்மையானது, கலாச்சார சூழ்நிலையே "அசுத்த ஆவி பிடித்தல்" மற்றும் அந்த பிடித்தல் பற்றிய நம்பிக்கை ஆகியவற்றை உண்டாக்குதலுக்குப் பொறுப்பு வகிக்கிறது என்பதை நிலைநாட்ட உதவுகிறது.*[16]

*அசுத்த ஆவிகள் மனிதர்களின் உடல்களில் வாசம்பண்ண இன்றைய நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை. இருந்தபோதிலும், அவற்றின் செல்வாக்கு இந்த உலகத்தில் இன்னமும் தெளிவாக உள்ளது, அதை எதிர்த்து நிற்க வேண்டும் (யாக்கோபு 4:7, 8).*

## இரட்சிக்கும் விசுவாசம் (8:29)

*இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார் என்று அசுத்த ஆவிகள் தாராளமாக அறிக்கை செய்தன (8:29). அவற்றின் கூற்று நிச்சயமற்ற தன்மையில் இருந்து வந்த ஒன்றாக இருக்கவில்லை. இது, இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசம்*

*மாத்திரம் போதுமானதல்ல என்பதற்கு வேதாகம ரீதியான நிரூபணமாக உள்ளது. மரித்த, செயலற்ற விசுவாசம் நம்மை இரட்சிக்க முடியாது. "செத்த" விசுவாசம் பற்றி யாக்கோபு கலந்துரையாடியபோது, அவர் பின்வரும் கூற்றை ஏற்படுத்தினார்: "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுக்குகின்றன" (யாக்கோபு 2:17, 19).*

## நமது மாபெரும் தேவை *(9:1-8)*

*மனிதர்களுக்கு ஆவிக்குரிய ஊழியம் செய்வதற்கு முன்னர், முதலில் அவர்களின் உடல்ரீதியான தேவைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. மக்கள் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் வாழ்வின் பிற அடிப்படைத் தேவைகளில் குறைவு பட்டிருந்தால், ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க நேரம் கொண்டிருத்தல் அவர்களுக்குக் கடினமானதாக இருக்கிறது. இது மதிப்பு மிக்க ஒரு உற்றுநோக்கலாக இருக்கையில், அவர்களுக்கு உதவி செய்யும் போது நாம் அடிக்கடி, உடல்ரீதியான மட்டதைக் தாண்டுவதில்லை. இருப்பினும், இந்த வரலாற்றில் இயேசு, திமிர்வாதக்காரரின் ஆவிக்குரிய தேவையை முதலில் கையாண்டார். அவர் அம்மனிதரின் பாவங்களை மன்னித்தார். அதன்பின்பு அவர் திமிர்வாதத்தில் இருந்து அம்மனிதரைக் குணமாக்கினார். தேவனுடன் மீளக்கட்டுவிக்கப்பட்ட உறவுமுறைக்கான நமது தேவையானது நித்தியத்தைத் தொடுவதாக இருப்பதால், அது உடல்ரீதியான மற்ற எந்தத் தேவையையும் விஞ்சி நிற்கிறது.*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 78. [2]Matthew Henry, *Commentary on the Whole Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 1243. [3]D. A. Carson, *When Jesus Confronts the World*: *An Exposition of Matthew 8-10* (Grand Rapids, Mich.: Baker Book House, 1987), 50. [4]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 129. [5]இந்த NIV வசனங்களில் உள்ள குறிப்புகள் - மத்தேயு 8:28; மாற்கு 5:1; அல்லது லூக்கா 8:26 ல் சேர்க்கப்பட்டுள்ளது, அதனில் இரண்டு இடங்களுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. [6]Josephus *Life* 9.42. [7]*காண்க* Vassilios Tzaferis, "A Pilgrimage to the Site of the Swine Miracle," *Biblical Archaeology Review* 15 (March-April 1989): 44-51. [8]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 208. [9]Josephus *Wars* 3.3.5. [10]Mishnah *Baba Kamma* 7.7.

[11]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 227. [12]*காண்க* Talmud *Shabbath* 55a; Mishnah *Sotah* 1.7, 8. [13]Talmud *Nedarim* 41a. [14]Morris, 216. [15]Mounce, 82. [16]Lynn A. McMillon, *Doctrines of Demons* (Nashville: Gospel Advocate Co., 1975), 98.